# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## O.S.No.291 of 2018

| | | |
|---|---|---|
| பெயர் | : | துரைராஜ் |
| தந்தை பெயர் | : | ராஜா |
| பி.வா.த.சா | : | |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் **04.03.2026** அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வா.த.சா. 3 - மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 1 -3 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**1-3 பிரதிவாதித் தரப்பில் குறுக்கு விசாரணை.**

வாதிகள் 2004 முதல் என்னுடைய உறவினர்கள் ஆனர்ர்கள். 2004 ம் ஆண்டு எனது மகளுக்கு திருமணம் ஆன வகையில் வாதிகள் எனது உறவினர்கள் ஆனார்கள். 2004 ம் ஆண்டிற்கு முன்பு வழக்கு சொத்தின் உண்மையான நிலவரம் என்ன என்று எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறானைவை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் குமாஸ்தாவாக இருந்தேன். தற்போது அந்த பணிக்கு செல்வதில்லை.

24.11.2016 தேதியிட்ட உயில் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி உயிலை வழக்கிறகாக வாதிகளுக்கு நான்தான் வாதிகளுக்கு போலியாக தயார் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரில் உயில் பற்றி புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வாதிகளுக்கு உறவினர் என்பதர்ல் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.05 15:06:18 -0500